**பொறந்த வீட்டு செந்தட்டை !**



மனிதர்கள் மற்றும் கால்நடைகளை வாழ வைத்த சிறுதானியங்கள் மற்றும் பயறு வகைகள் கொஞ்சம் கொஞ்சமாக வழக்கொழிந்து கொண்டிருக்கின்றன. என்றாலும் ஒரு சிலர், இவற்றையெல்லாம் விடாமல் சாகுபடி செய்து கொண்டுள்ளனர். அந்த வரிசையில் தட்டைப் பயிறு விவசாயத்தை மானாவாரியில் மேற்கொண்டு. உழைப்புக்கேற்ற ஊதியத்தையும் பெற்று வருகிறது. சிவன் மலையப்பன் - சுப்புலட்சுமி தம்பதி (அலைபேசி : 99427 - 18400). ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், செங்காட்டூர் கிராமத்தைச் சேர்ந்த இத்தம்பதியின் தோட்டத்தில் கொத்துக் கொத்தாக தட்டைக் காய்கள் காய்த்துக் குலுங்குகிறது. நாலு ஏக்கர் பூமியில் கிணத்துப் பாசனம் பண்ணி கறவை மாட்டுக்காக பசுந்தீவனம் பயிர் பண்றோம். மானாவாரியில் சோளம் தான் முக்கியமான வெள்ளாமை, அதை மட்டும் தான் முக்கியமான வெள்ளாமை, அதை மட்டும் தான் ரொம்ப நாளா செய்துகிட்டிருந்தோம். 5 கிலோ தட்டை விதையைக் எங்க தோட்டத்துல விதைச்சி விட்டோம். பத்து நாளைக்கு ஒரு தண்ணின்னு குறைவா இருக்கிறதால மனசு போல புடிச்சு நிக்குது வெள்ளாமை என்று செந்தட்டை சாகுபடியை சிறுகதையோடு சேர்த்து சொல்லி முடித்தது தம்பதி.

**சாகுபடி தொழில்நுட்பங்கள்**

ஒரு ஏக்கரில் செந்தட்டை பயிர் செய்ய, ஆட்டு எரு 1 லோடு கொட்டி இறைக்கவேண்டும். மண் பொலபொலப்பு ஆகும் வகையில் இரண்டு உழவு செய்யவேண்டும். பார் முறை பாத்திகள் அமைத்து, ஓர் அடிக்கு ஓர் அடி இடைவெளி விட்டு விதைகளை ஊன்றவேண்டும். 20 நாளில் ஒரு களை எடுத்து, 1 மூட்டை யூரியா வைக்கவேண்டும். பின்னர் 50ம் நாளில் பூ எடுத்தவுடன், ஒரு கலப்பு உரம் தரவேண்டும். செழித்து வளர்ந்த செடிகள், பூ நன்றாகப் பிடித்து உதிராமல் நிற்கும். காய்ப்புத் திறனும் கூடும்.சாறு உறிஞ்சும் பூச்சிகள் மற்றும் வண்டுகள் நடமாட்டம் இருக்கும். இது பச்சையத்தை உறிஞ்சி இலைகளை வெளுப்பாகும். இதைப் போக்கிட, 30ம் நாளில் மற்றும் 60ம் நாளில் டைமெத்தேட் மற்றும் மோனோகுரோட்டபாஸ் மருந்துகளை தெளிக்கலாம்.செந்தட்டையை தனிப்பயிராகவோ.. ஊடுபயிராகவோ விதைக்கலாம். நிலக்கடலை மற்றும் எள் சாகுபடி ஏற்ற டுபயிர்களில் செந்தட்டைக்கு முக்கிய இடம் உண்டு. விளைந்து அறுவடை செய்யப்பட்ட பயறுகளில் நல்ல ஊக்கமானவற்றை அள்ளி, நன்றாக முறம் கொண்டு புடைப்பதன் மூலம் பிஞ்சு, சொத்தை எல்லாவற்றையும் அப்புறப்படுத்திடவேண்டும். பிறகு, நல்ல வெயிலில் நான்கு நாட்கள் உலர்த்தவேண்டும். இல்லை என்றால் விதைகள் உளுத்துவிடும். மானாவாரியாக செய்கிறவர்கள்.

புரட்டாசிப் பட்டத்தில், விதைத்துவிட்டு மேல் உழவு ஓட்டிவிட்டால் போதும், அடுத்து கிடைக்கிற மழையில செழித்து வளரும்.பக்குவமாக சாகுபடி தொழில்நுட்பங்களை விளக்கி முடித்த சிவன் மலையப்பன், நாங்க பங்குனிப் பட்டத்துல விதைச்சோம். நாறு மாசத்துல பலனுக்கு வந்துடுச்சி. எங்களைப் பொறுத்த வரை 800 கிலோ வரைக்கும் மகசூல் கிடைக்கும். இன்னிய தேதியில கிலோ 30 ரூபாய்க்கு குறைவில்லாம போகுது. ஒரு ஏக்கர்ல... மானாவாரியில.. நாலு மாசத்துல இந்த அளவுக்கு லாபம் கிடைக்கறதனால செந்தட்டை சாகுபடியை நாங்க விடாம செய்ய முடிவு பண்ணிட்டோம்.
ஒரு ஏக்கரில் செந்தட்டை சாகுபடி செய்ய செலவு - வரவு கணக்கு ரூபாய் மதிப்பில்

| விவரம் | செலவு | வரவு |
|---|---|---|
| அடியுரம் ஆட்டு எரு | 500 | |
| உழவு இரண்டு தடவை | 400 | |
| பாத்தி அமைக்க | 300 | |
| விதை 5 கிலோ | 200 | |
| நடவு செய்ய | 300 | |
| தண்ணீர் பாய்ச்சல் | 1,000 | |
| களை எடுத்தல் (இரண்டு தடவை) | 700 | |
| உரம் (இரண்டு தடவை) | 750 | |
| பூச்சி மருந்து (இரண்டு தடவை) | 450 | |
| பறிப்புக் கூலி அறுவடை | 800 | |
| மகசூல் : 800 கிலோ கிலோ 30 ரூபாய் வீதம் (800 x 30) | | 24,000 |
| செந்தட்டைக் கொடி | | 1,500 |
| மொத்தம் | 5,400 | 25,500 |
| 120 நாளில் நிகர லாபம் | | 20,100 |

(சொந்த ஆட்களின் கூலியும் கணக்கில் அடக்கம்)